2014 ஜனவரி 31]

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டவேண்டுமென்று சொன்னால், ஒரு இலட்சம் போக்குவரத்து அலகுகளுக்கு மேல் இருந்தால்தான், அந்தப் பகுதியிலே மேம்பாலம் கட்ட முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியில் வாகனங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, அதிலே ஒரு இலட்சம் போக்குவரத்து அலகுகளுக்கு மேல் இருப்பின், பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

கணினிமயமாக்குதல்

***2075—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளையும் கணினிமயமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகளைக் கணினிமூலம் கண்காணிக்க வேண்டிய அவசியம் கருதி முழுமையான கணினிமயமாக்கல் அதாவது End to End Computerisation *திட்டத்தினைக் கொண்டு வருவதற்காக*

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரிவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. முழுமையாக கணினிமயமாக்கும் பணிகளை 2014 ஆம் ஆண்டு இறுதிக்குள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கால அவகாசம் எதற்காகத் தேவைப்படுகிறது என்று சொன்னால், தமிழ்நாட்டில் செயல்படும் 33,839 நியாய விலை அங்காடிகள், 227 பொது விநியோகத் திட்டக் கிடங்குகள், 241 வட்ட மண்டல அலுவலகங்கள் மற்றும் மாவட்ட மாநில தலைமை அலுவலகங்களையும் ஒருங்கிணைத்து, மொத்தமுள்ள 1 கோடியே 97 இலட்சம் குடும்ப அட்டைகளின் விவரங்களையும் இணைத்துச் செயல்படுத்த வேண்டியுள்ளது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

11—

பால் குளிரூட்டும் நிலையம்

***22772—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

சங்ககிரி தொகுதியில் நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் பால் கையாளும் வகையில் தலா ஐந்தாயிரம் லிட்டர் கொள்ளளவு